திருநாள்பாட்டு

வாதாசனவரிவரென வருமா பாஷியம் வகைபெறுநாள்
வகுளாபரணப் பெருமாள் தமிழின் வாசியறிந்திடுநாள்
பேதாபேதம் பிரமமெனுவகை பிரமந்தெளிவித்திடுநாள்
பேச்சொன்றுக்குச் சததூஷணியைப் பேசிய தேசிகநாள்
தீதாகிய பலமாயக்களைகளைச் சிக்கென வென்றிடுநாள்
திக்கெட்டும்புகழ் ஸ்ரீபாஷியத்தைத் தெளியவுரைத்திடுநாள்
ஓதாதோதும் வேதாந்தாரியன் உதயஞ்செய்திடுநாள்
உத்தமமான புரட்டாசி திருவோணமெனுந்நாளே.